இருக்கின்ற காரணத்தினாலும், நுகர்வோர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்ற காரணத்தினாலும், அவர்கள் ஆவின் பாலை அதிகம் விரும்பி வருகின்ற காரணத்தினாலும், அதிக தேவை (demand) இருக்கின்றது. இன்றைக்கும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, ஒன்றியங்களிலிருந்து அதிகமாக பால் கொள்முதல் செய்யப்பட்டு, நகரங்களுக்கு, சென்னை போன்ற மாநகரங்களுக்கு அதிகமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இன்றைக்கு 5,000 பால் உற்பத்தியாளர்களுக்கு 10,000 கறவை மாடுகள் வழங்கும் திட்டம் இருக்கின்றது. இதன்மூலம் பால் உற்பத்தியினை அதிகரிக்க செய்து, சென்னை மாநகரத்திற்கு மேலும் பால் demand இல்லாமல், பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) மதுரை மாவட்டம், வடக்கம்பட்டி கிராமம், பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்து

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, Speaker Sir, ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நிறைய உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) மதுரை மாவட்டம், வடக்கம்பட்டி கிராமத்தில் 7–7–2009 அன்று இரவு பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்து காரணமாக 18 பேர் பலியானது மற்றும் பலர் காயமுற்றது குறித்து விதி 55, 56–ன் கீழ், Notice கொடுத்திருக்கிறார்கள். அதை நான் முதலில் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, பயிற்சி டாக்டர்கள் ஏற்கெனவே பல நாட்களாக...(குறுக்கீடு)

2009 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். இதை எடுத்தபின், அடுத்ததாக எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள்.

மதுரை மாவட்டம், வடக்கம்பட்டி கிராமத்தில் 7–7–2009 அன்று இரவு பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தினால் 18 பேர் பலியானது மற்றும் பலர் காயம் அடைந்தது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ச. லட்சுமணன் மற்றும் திரு. பி. மூர்த்தி ஆகியோரும், அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பின்ர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. இ. மகேந்திரன், திரு. சி. துரைராஜ், திரு. ஆர். சாமி, திரு. ஏ.கே. போஸ், திரு. ஆர்.டி. கணேசன் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. கோவை தங்கம், திரு. விடியல் எஸ். சேகர், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன் ஆகியோரும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. கோவிந்தசாமி, திரு. வே. மாரிமுத்து, திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜாண் ஜோசப், திருமதி ரா. லீமா றோஸ், திருமதி ஜி. லதா ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வை. சிவபுண்ணியம், திரு. எஸ். இராசசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. சு. குணசேகரன், திருமதி பி. பத்மாவதி ஆகியோரும், ம.தி.மு.க. கட்சியின் சார்பாக திரு. ஆர். ஞானதாஸ் அவர்களும் விதி 55 மற்றும் 56–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்பு கொடுத்தவர்கள் சுருக்கமாகக் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். இது ஒரே ஒரு issue–வைக் குறிக்கின்ற காரணத்தினால், எல்லோரும் இதை simple–ஆக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் மேற்கொண்டு நிறைய விஷயங்களை எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி அருகேயுள்ளது வடக்கம்பட்டி. இங்கு அதே ஊரினைச் சேர்ந்த திரு. துரைப்பாண்டியன் என்பவர்,

[திரு. ச. லட்சுமணன்] [2009 ஜூலை 8

அரசு அனுமதியுடன் பட்டாசுத் தொழிற்சாலை நடத்தி வருகின்றார். நேற்று மாலை ஏற்பட்ட வெடி விபத்தில் 18 பேர்கள் உடல் கருகி இறந்துள்ளனர். அங்கு 50–க்கு மேற்பட்டோர் பணியில் இருந்த சமயத்தில் சுமார் 25 பேர்களுக்குமேல் காயம் அடைந்துள்ளனர். அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிதியிலிருந்து—விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்குக் கூடுதலாக அதிகபட்ச நிதியுதவி வழங்கவேண்டும் என்றும், காயம் அடைந்தவர்களுக்கும் தக்க நிதியுதவி வழங்குமாறும் பணிவுடன் கவனத்தினை ஈர்த்து அமர்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் யார்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், வடக்கம்பட்டியில் நேற்றிரவு சுமார் 7–00 மணியளவில் ஒரு விரும்பத்தகாத நிகழ்வு நடந்தேறியிருக்கிறது. அங்கு திரு. துரைபாண்டியன் என்பவருக்குச் சொந்தமான ஒரு பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்து காரணமாக, அங்கு பணிபுரிந்த சுமார் 60 பேர்களில் 18 நபர்களுக்கு உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிறது. சுமார் நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்து அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கோர விபத்தில் மரணமடைந்த 18 நபர்களுக்கு இந்த அரசு சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும், அதோடு அங்கு காயமடைந்த நாற்பதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டுமென்றும் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் தொடர்ந்து ஒரு பதற்றமான சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. எனவே, அந்த விபத்து குறித்து ஒரு விசாரணை நடத்தி, பாதுகாப்பு இன்மையால் ஏற்பட்ட விபத்தால், நடந்த விபத்துக்குக் காரணமான அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுபோன்று தொடர்ந்து அந்தப் பகுதியில் பட்டாசு வெடி விபத்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கு முறையாக அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை அரசு ஆய்வு செய்ய வேண்டும். அதோடு மதுரையில் அடிக்கடி இதுபோன்ற டிபன் பாக்ஸ் வெடிகுண்டு விபத்து, கூஜா வெடிகுண்டு விபத்து போன்ற

2009 ஜூலை 8] [திரு. இ. மகேந்திரன்]

நிகழ்வுகள் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன. இதைத் தடுக்கின்ற வகையில், இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பாதிக்கப்பட்டவர்களின் துயரைத் துடைக்க அவர்களுக்கு அரசு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டு, அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் நடைபெற்றிருக்கிற பட்டாசுத் தொழிற்சாலையினுடைய தீ விபத்தில், 18 பேர் ஏற்கெனவே மாண்டு போயும், அதேபோல 25 பேர் படுகாயமடைந்தும் இருக்கிறார்கள். அடிக்கடி பட்டாசுத் தொழிற்சாலையிலே இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்று வருவது என்பது, நமக்கு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. காரணம், அங்கே நம்முடைய அலுவலர்கள் முறையாக அதைச் சோதனையிடுகிறார்களா? Explosives Licence அதற்கு வழங்கப்பட்டிருக்கிறதா? Safety measures சரியாக அமைக்கப்படாத காரணத்தினாலே, இப்படிப்பட்ட தீ விபத்துகள் ஏற்படுகின்றன. பக்கத்திலேயே குடியிருப்புகள் இருக்கின்றன. குடியிருப்புகளில் இருக்கக்கூடியவர்களும் இதிலே பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பட்டாசுத் தொழிற்சாலைகளை அமைக்கிறபோது, ஊருக்கு ஒதுக்குப்புறமாக, குடியிருப்புகளே இல்லாத இடமாகத் தேர்ந்தெடுத்துத்தான் இவற்றை அமைப்பதற்கான வழிமுறைகளை, உத்தரவுகளை அரசு வழங்கியிருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிகழ்வுகளை எல்லாம் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால்—ஏற்கெனவே தமிழக அரசின் சார்பாக, காட்பாடியிலே வெடி மருந்து தொழிற்சாலை ஒன்று வைத்திருக்கிறோம்—அப்படிப்பட்ட வெடிமருந்து தொழிற்சாலையிலேயே பெரிய அளவிலே இதுபோன்ற பட்டாசுகளையெல்லாம் தயாரித்து மாவட்டத்திற்கு மாவட்டம் அரசே விற்பனை செய்தாலுங்கூட, இப்படிப்பட்ட நிகழ்வுகளையெல்லாம் தடுத்து நிறுத்த முடியும். நம்முடைய காட்பாடி அரசு வெடி மருந்து தொழிற்சாலை நட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதைப் பாதுகாக்கின்ற வகையிலேயும், அங்கேயே பட்டாசுகளைத் தயாரித்து பெரிய அளவிலே எல்லா மாவட்டங்களுக்கும் சப்ளை செய்வதற்கு ஆவன செய்து, இப்படிப்பட்ட பேரிழப்புகளை அரசு தடுத்து நிறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [2009 ஜூலை 8

அதேபோல, ஏற்கெனவே இறந்துபோனவர்களின் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் ஐந்து இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும் நிதி உதவியை அரசு வழங்கி, அவர்களுடைய குடும்பத்திற்கு நல்ல ஒரு ஏற்பாட்டை அரசு செய்து தருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே வடக்கம்பட்டியில் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தால் ஏறக்குறைய 17 பேர் உயிரிழந்திருப்பதாகவும், நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் காயமுற்றிருப்பதாகவும் நாம் செய்திமூலம் தெரிந்து கொண்டிருக்கிறோம். அந்தவகையில் இந்த வெடி விபத்து ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டும். இதுபோன்ற வெடி விபத்துகள் சிவகாசி, விருதுநகர், கோவில்பட்டி பகுதிகளிலும், மதுரை பகுதியிலும் அடிக்கடி நடந்துகொண்டிருக்கின்றன. எனவே, இந்தப் பட்டாசு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் Safety measures–ஐ, பாதுகாப்புப் பணிகளைச் சரியாகக் கண்காணிப்பதற்கு, நம்முடைய அதிகாரிகள் அதிலே சிறப்புக் கவனம் எடுப்பதற்கு நம்முடைய அரசு முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, இதுபோன்ற பணிகளிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு அதிக அளவு நிதிப் பயன்களைக் கொடுக்கக்கூடிய காப்பீட்டுத் திட்டங்களை அரசு கொண்டுவருமா என்றும் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

அதேபோன்று, அங்கே விபத்திலே இறந்திருக்கின்றவர்களுடைய ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 இலட்சம் ரூபாய் நிதியும், அதிலே காயமுற்றவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் நிதியும் கொடுப்பதற்கு அரசு முன்வருமா எனக் கேட்டு, இதுபோன்ற வெடி விபத்துகளைத் தவிர்ப்பதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா எனவும் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 8]

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகேயுள்ள வடக்கம்பட்டி என்கிற ஊரில், V.P.M. என்கிற ஒரு பட்டாசுத் தொழிற்சாலை, துரைப்பாண்டியன் என்பவரால் நடத்தப்பட்டு வருவதாகவும், அதிலே சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுவதாகவும், அவர்களுள் 15 வயதிற்குட்பட்டவர்கள் அதிக எண்ணிக்கையில் பணியாற்றுவதாகவும், அவர்கள் 24 மணி நேரமும் shift முறையில் பணியாற்றுவதாகவும் செய்திகளெல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தொழிற்சாலையில் நேற்று மாலையில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக, கடுமையானதொரு வெடி விபத்து ஏற்பட்டு, கட்டடத்தினுடைய இதர பகுதிகளிலும் தீ பரவி, அப்போது பணியிலிருந்த சுமார் 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, 18 பேர் அதில் உயிரிழந்திருப்பதும், 25-க்கும் மேற்பட்டவர்கள் கடுமையான காயங்களோடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதும், உண்மையிலேயே மிகுந்த வேதனை அளிக்கக்கூடிய ஒரு செய்தியாக இருக்கிறது.

நம்முடைய அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், தொடர்ந்து இதுபோன்ற பட்டாசுத் தொழிற்சாலைகளிலும் அல்லது தீப்பெட்டி தயார் செய்யக்கூடிய தொழிற்சாலைகளிலும், வெடி விபத்துகள் தொடர்ந்து நடைபெறுகிற ஒரு நிகழ்வாகவும், அதன்மூலம் பல அப்பாவித் தொழிலாளர்களுடைய உயிர் பலியாகிற நிலைமையும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற ஆபத்தான தொழிற்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை, நம்முடைய அரசினுடைய சம்பந்தப்பட்ட துறை கண்காணித்து, அவ்வாறு விபத்துகள் நடக்காதவண்ணம் மாற்று ஏற்பாடுகளை நிருவாகங்கள் செய்திருக்கின்றனவா என்பதையெல்லாம் கண்காணித்து, அவ்வாறு இல்லாத நிறுவனங்கள்மீது உரிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதையும் நான் இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

இங்கே வந்திருக்கிற செய்திகளைப் பார்க்கிறபோது, 15 வயதிற்குட்பட்ட தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலையில் அதிகமாக வேலை செய்கிறார்கள் என்றால், அவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் என்ற பட்டியலிலே இடம் பெறக்கூடியவர்கள். அப்படிப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களை அதிகமாக வைத்து, இதுபோன்ற ஆபத்தான தொழிலிலே அவர்களை ஈடுபடுத்துகிற அந்த நிருவாகத்தின்மீது, கடுமையானதொரு நடவடிக்கையை நாம்

மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அங்கே உயிரிழந்த அந்தக் குடும்பத்தாருக்கு—இங்கே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்னதைப்போல—தலா 5 இலட்சம் ரூபாய் நிதியுதவியும், அதேபோல காயமடைந்து சிகிச்சை பெற்று வரக்கூடியவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியும், அவர்களுக்கு உரிய தரமான சிகிச்சை கிடைப்பதற்கும், அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசின் அனுமதியோடு நடைபெறுகிற இந்த ஆலையில், இப்படிப்பட்ட ஒரு கோர விபத்து நடைபெற்றிருக்கிறது. விபத்துத் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு—இந்த விபத்தின்மூலமாகவாவது—அரசுத் துறை உரிய முறையில் கண்காணிப்பினைச் செலுத்தி, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட ஆபத்தான விபத்துகள் நிகழாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் அருகேயுள்ள வடக்கம்பட்டியில் நடைபெற்றிருக்கிற அந்த வெடி விபத்திலே கிட்டத்தட்ட 18 தொழிலாளர்கள் உயிரிழந்திருக்கிறார்கள்; 40-க்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சம்பவம் அந்தப் பகுதியில் மிகப் பெரிய வேதனையை உண்டாக்கியிருக்கின்றது.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி, சிவகாசியைச் சுற்றியுள்ள பகுதிகள், இப்பொழுது மதுரை மாவட்டம், உசிலம்பட்டி என்று தொடர்ச்சியாக இப்படிப்பட்ட வெடி விபத்துகள் நடந்துகொண்டிருக்கின்றன. பொதுவாக, பட்டாசுத் தொழிற்சாலைகள் விதிமுறைகளைச் சரியான முறையில் கடைப்பிடிக்கின்றனவா என்பதை ஆராய வேண்டும். விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்க, அதிகாரிகள் அந்தத் தொழிற்சாலைகளை முறையாகக் கண்காணிக்க வேண்டும். விபத்துகள் அதிகம் நடப்பதற்குக் காரணம், 'மணி மருந்து' என்று சொல்லப்படுகிறது. அந்த மணி மருந்து குடோன், தனியாக அமைக்கப்படவேண்டும். அதோடு, fancy ரக வெடிகளின் உற்பத்தியால்தான், விபத்துகள் என்பது அதிகமாக நடக்கின்றன. எனவே, fancy ரக வெடித் தொழிற்சாலைகளைச் சிறப்பு விதிகளின்படி தனியாக அமைக்கவேண்டும்.

2009 ஜூலை 8] [திரு. தி. இராமசாமி]

முற்பகல் 10–50

அதுபோக, அங்கு பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு, உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் மருந்துகளைக் கையாளுகின்ற தொழிலாளர்களுக்குத் தனியான சிறப்புப் பயிற்சி அளித்து, அவர்களை அந்தப் பணியில் ஈடுபடுத்தவேண்டும். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூபாய் ஐந்து இலட்சம் இழப்பீடும், காயம்பட்டவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் இழப்பீடும் வழங்கி, இப்படிப்பட்ட விபத்துகள் தொடர்ச்சியாக நடைபெறாதவண்ணம் அரசு முழுக் கண்காணிப்போடு அதிகாரிகளைச் செயல்பட வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அரசினுடைய கவனத்தை ஈர்த்து விடைபெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, ம.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகிலுள்ள வடக்கம்பட்டியில் பட்டாசு ஆலையில் நேற்று விபத்து ஏற்பட்டு 18 பேர் உயிரிழந்துள்ளனர். 50–க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மாதிரியான பட்டாசு ஆலை விபத்துகள் அடிக்கடி நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இம்மாதிரி விபத்துகள் ஏற்படுவதற்கு மூலக் காரணம் என்பது 'மணி மருந்து' என்கின்ற கலவையாகும். அந்த மணி மருந்துக் கலவையை உரிய முறையில் கையாளுவதற்கும், அந்த மருந்தை store செய்வதற்கும் உள்ள விதிமுறைகள் கடுமையாக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல; பட்டாசு ஆலையில் பணிபுரிகின்றவர்கள் ஏழை மக்களாகவும், கல்வி அறிவில்லாதவர்களாகவும் இருக்கின்றார்கள். அந்தச் சூழ்நிலையில், அவர்கள் கையாளுகின்ற அந்த இரசாயனப் பொருட்களின் கொடிய தன்மையை அறியாதவர்களாக இருக்கின்றார்கள். எனவே, அவர்கள், தாங்கள் கையாளுகின்ற அந்தப் பட்டாசுகளுக்கான மூலப் பொருட்களைப்பற்றியும், அந்த மருந்துகளின் கொடிய தன்மையைப்பற்றியும் அறிந்துகொள்வதற்குப் போதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். விபத்துகளைத் தவிர்க்கும் முறைகளையும் அவர்களுக்குக் கற்றுத் தர வேண்டும். இதுசம்பந்தமாக, 2006 ஆம் ஆண்டிலேயே இந்தச் சட்டமன்றத்தில் ஒரு கேள்வியை நான் எழுப்பியிருந்தேன் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

[திரு. ஆர். ஞானதாஸ்] [2009 ஜூலை 8

வெடி விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூபாய் 5 இலட்சமும், காயமடைந்தவர்களுக்குத் தலா 2 இலட்சம் ரூபாயும் அரசு வழங்க வேண்டுமென்று கோரி, இம்மாதிரி விபத்துகள் நிகழாவண்ணம் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் .

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்கு அருகே உசிலம்பட்டியை ஒட்டிய கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டு, பட்டாசுத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்கள் 17 பேர் மறைந்திருக்கிறார்கள். 4 பேருடைய நிலை கவலைக்கிடம் என்று நான் விசாரித்தவரையில் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலைக்கு உரியவர்கள் யார் என்பதை விசாரித்தபோது, இது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் எண்ணியதுபோல அல்லது கூறியதுபோல, இது அரசுக்குச் சொந்தமான ஒரு தொழிற்சாலை அல்ல. ஞானசேகரன் அவர்கள், இப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல் உரிமம் வழங்கலாமா என்று கேட்டார்; வழக்கமான ஆத்திரத்தோடு கேட்டார். 1963–இலேயே அப்படிப்பட்ட உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்போது யார் ஆண்டார்கள் என்பது ஞானசேகரனுக்கு நன்றாக நினைவிருக்கும் என்று கருதுகின்றேன்.

முற்பகல் 10–55

அதுபோக, இந்தச் செய்தி கிடைத்தபோது மத்திய அரசினுடைய அமைச்சர் திரு. மு.க. அழகிரி சென்னையிலே இருந்தார். அப்போதுதான் சென்னைக்கு வந்தார். செய்தியைக் கேள்விப்பட்டதும் விமானத்தின்மூலமாக அங்கே அவர் சென்று, பாதிக்கப்பட்ட மக்களையெல்லாம் சந்தித்து, அந்தத் தொழிற்சாலை அமைந்துள்ள ஊருக்கே சென்று, அங்குள்ளவர்களையெல்லாம் பார்த்து ஆறுதல் கூறி, நம்முடைய அரசின் சார்பாக, இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், காயம்பட்டவர்களுக்கு, காயங்களின் தன்மைக்கேற்ப, அவர்களுடைய சிகிச்சைக்குத் தேவையான அந்தத் தொகையை வழங்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக இந்த அரசினுடைய உத்தரவை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

VAIMAYE VELLUM / TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 8] [கலைஞர் மு. கருணாநிதி]

இறந்தவர்கள் 10 பேர் என்று முதலில் செய்தி கிடைத்தது. இப்போது கிடைத்திருக்கின்ற செய்தியின்படி, 17 பேர் இறந்து போயிருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. இதிலே, ஒரு இலட்சம், ஐந்து இலட்சம் என்றெல்லாம் அவர்களுக்கு நிதி கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள், அனுதாப உணர்வோடு இங்கே சொன்னார்கள். இதிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு—இந்தத் தொழிற்சாலை இப்படிப்பட்ட விபத்திற்கு உள்ளானதற்குக் காரணம், 1963 ஆம் ஆண்டிலே இதற்கான உரிமம் பெற்று, 2011 ஆம் ஆண்டுவரையிலே அந்த உரிமம் செல்லும் என்ற நிலையை உருவாக்கியிருக்கின்ற அதனுடைய உரிமையாளர்கள், இந்த விபத்துக்குத் தாங்களும் பொறுப்பேற்று, சிகிச்சை பெற்று வருபவர்களுக்கும், இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்கும், தங்களாலான உதவியைச் செய்வார்களேயானால், அப்படிச் செய்ய வேண்டுமென்று அரசின் சார்பாகக் கட்டாயப்படுத்தப்படுவார்களேயானால்தான், அடுத்து இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை உருவாக்க எண்ணுகின்றவர்கள் அல்லது முன்வருகின்றவர்கள், அதிலே ஏற்படுகின்ற விபத்துகளைச் சமாளிக்க, பல இலட்சம் ரூபாய் செலவிட வேண்டுமே என்பதையும் எண்ணிப் பார்த்துச் செயல்படுவார்கள். ஆகவேதான், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நான் காலையிலே பேசினேன். அவரும் சம்பவ இடத்திற்குச் சென்று, நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த நண்பர்களும் அந்த நிவாரணப் பணியிலே ஈடுபடுவார்களென்று நான் நம்புகின்றேன். இனி இப்படிப்பட்ட விபத்துகள் நேராவண்ணம் அரசு பொறுப்பேற்றுப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று உறுப்பினர்கள் சிலர் இங்கே உறுதிபடச் சொன்னார்கள். இது அரசின் பொறுப்பினை மாத்திரமல்ல; இத்தகைய தொழிற்சாலைகளை உருவாக்குகின்றவர்கள், இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்னென்ன என்பதையும், இதுபோன்ற ஆபத்துக்கள் ஏற்படும் என்பதையும் எண்ணிப் பார்த்து, அதற்கேற்ப தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

பொதுவாக, பட்டாசுக் கடைகளிலேதான் இந்தத் தீ விபத்து ஏற்படுகிறது என்பதற்காக, பட்டாசுகளையே யாரும் உற்பத்தி செய்யக்கூடாது என்று தடை விதித்தால், அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற மக்கள், சாதாரண, சாமானிய மக்கள், அவர்கள் எத்தகைய அவல நிலைக்கு உள்ளாவார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். பட்டாசு வேண்டாமென்று சொன்னால், தீபாவளியே வேண்டாம் என்று

சொல்ல வேண்டும். தீபாவளி வேண்டாமென்று சொன்னால், பிறகு வேறு ஒரு விழாவிலே பட்டாசுகளை வெடிக்க வேண்டும். எப்படியிருந்தாலும், பட்டாசு என்பது இருந்துதான் தீரும். அந்தப் பட்டாசு உள்ளவரையில், இந்த விபத்துகள் தவிர்க்க முடியாதவைதான். இருந்தாலும், இதிலும் ஜாக்கிரதையாக தொழில் நடத்துகின்றவர்கள் ஈடுபட வேண்டும் என்பதை இந்தத் தீர்மானத்தின்மூலமாக அவர்களுக்கு வலியுறுத்தி, இங்கே குறிப்பிட்டதைப்போல இறந்தவர்களுடைய குடும்பங்களுக்குப் போதுமான அளவிற்கு நிவாரண நிதி வழங்கப்படும் என்பதையும், நேரிலே மாவட்ட அதிகாரிகள் சென்று பார்த்து, தேவைப்பட்டால் அதிக நிதியை வழங்குவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–00

(ஆ) மருத்துவக் கல்லூரி பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, திரு. பீட்டர் அல்போன்ஸ்? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் முதலில் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், நேற்று சொன்னோமல்லவா? அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் பயிற்சி மருத்துவர்கள் குறித்து சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, நீங்கள் சொல்ல வேண்டியதில்லை, உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடு) என்ன எடுக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். உட்காருங்கள். (குறுக்கீடு) முறையாகத்தான் கூப்பிடப்போகிறேன். முறை என்னவென்று எனக்குத் தெரியும். உட்காருங்கள்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் பயிற்சி மருத்துவர்கள், தங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தக் கோரி போராட்டம் நடத்தி வருவது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. செ.ம. வேலுசாமி, திரு. எல். ரவிச்சந்திரன், திரு. பி. தங்கமணி, திரு. செ. பொன்னுதுரை,